ஆறும் அத்தியாயத்தின் பரம ஸாரம்

அர்ஜுனன்!க்ருஷ்ண!முன் ஐந்து அத்யாயங்களில் கர்மயோக ஸாத்யமான ஜ்ஞானயோகமும்,ஆத்மயாதாத்ம்ய ஜ்ஞானமாகிற அங்கங்களோடு கூடிய கர்மயோகமும் உன்னால் விரிவாகச் சொல்லப்பட்டன.கர்மயோக ஸாத்யமான ஸமாதி என்ற பெயருடைய யோகம் அங்கங்களொடு சொல்ல வேண்டும்

க்ருஷ்ணன்–பார்த்த!கர்மயோகம் ஜ்ஞானயோகத்தை இடையிடாமலே ஆத்மாவலோசன ஸாதனமாகிறது என்பதை முன்பே விளக்கியுள்ளேன். மறுபடியும் சொல்லுகிறேன்.கர்மாக்களுக்குப் பலனாகிய ஸ்வர்க்கம் முதலிய பலனை விரும்பாமல் கர்மானுஷ்டடத்தையே செய்ய வேண்டும். இவ்விதம் செய்வது பகவதாராதனமாகிறது.பகவதாராதன்மாயும் ஸ்வயம் ப்ரயோஜனமாயும் எண்ணி,பலனில் ஆசையற்று,கர்மாவை எவன் செய்கிறானோ அவனே ஜ்ஞானயோகியாகவும் ஆகிறான்,கர்மயோகியாகவும் ஆகிறான்.

அர்ஜுனன்–கண்ணா!எவன் கர்மாவைச் செய்கிறானோ அவன் ஸந்நியாஸி என்றும் யோகி என்றும் அருளிச் செய்கிறாய்.கர்மாவைச் செய்கிறவன் யோகியாகையாலே அவனை யோகி எனலாம்.அவனை ஸ்ந்நியாஸி–விட்டவன் என்று எப்படிச் சொல்லலாம்.கர்மாவை அநுஷ்டிப்பது ஸந்நியாஸமாகாதன்றோ?

க்ருஷ்ணன்–கௌந்தேய!ஆத்மாவின் உண்மையைப்பற்றின ஜ்ஞானத்தைத்தான் ஸ்ந்நியாஸம்–ஜ்ஞானயோகம் என்று சொல்லுகிறார்கள்.இந்த ஸந்நியாஸம் என்பது,யோகம் என்று சொல்லப்படும் கர்மயோகத்திற்கு விசேஷண்மாய்க் கொண்டு யோகம் என்று சொல்லப்படுகிறது.இதை விவரித்து கூறுகிறேன் கேள்.ஆத்மாவின் உண்மை ஸ்வரூபத்தை அநிஸந்தானம் பண்ணுவதால் ஆத்மா அல்லாத சரீரத்தில் ஆத்மா என்ற ப்ரமம் எவனால் ஸந்ந்யஸ்த:–விடப்பட்டதோ அவன் ஸந்ந்யஸ்த ஸங்கல்பன்.

ஆத்மாவின் உண்மை ஸ்வரூபத்தை அநுஸந்தானம் பண்ணுதல் என்ற விசேஷணமில்லாவிட்டால் அது கர்மயோகமே ஆகாது.

அர்ஜுனன்–கேசவ!பலாபிஸந்தி ரஹிதமாகக் கர்மயோகத்தை அநுஷ்டிக்க வேண்டும் என்றாய்.அதை எத்தனை காலம் அநுஷ்டிக்க வேண்டும்?ஒரு நாள் அநுஷ்டித்தால் போதுமா? ஆத்மாவலோகனமாகிற பலன் கிட்டும் வரை அநுஷ்டிக்க வேண்டுமா?

க்ருஷ்ணன்–ஆத்மாவலோகனத்தைப்பெற,கர்மயோகம் காரணமாகச் சொல்லப்பட்டிருப்பதால் ஆத்மாவலோகனமாகிய பலனைப் பெறும் வரையில் கர்மயோகத்தைச் செய்துவர வேண்டும்.

அர்ஜுனன்–கண்ண!அவன் எப்பொழுது நிலைநின்ற யோகத்தை உடையவனாகிறான்?

க்ருஷ்ணன்–பாண்டவ!யோகியானவன் எப்பொழுது ஆத்மா ஒன்றையே அனுபவிக்கிறவனாய்,ஆத்மாவைத் தவிர இந்த்ரியங்களின் விஷயங்களிலும் அவற்றைச் சேர்ந்த கர்மங்களிலும் பற்றுதலை அடைகிறதில்லையோ அப்பொழுது நிலைநின்ற யோகத்தையுடவனாகிறான்.

அர்ஜுனன்–கர்மயோகத்தினால் பாபம் போய் மனம் சுத்தமானால்தான் ஆத்மாவலோகனம் பண்ண முடியும் என்றாய்.எதனால் அவ்விதம் சொல்லப்பட்டது என்பதை அருளிச் செய்ய வேண்டும்?

க்ருஷ்ணன்–ஆத்மாவைக் கரையேற்றுவது,ஆத்மாவைத் துக்கப்படும்படி செய்வது இவை இரண்டிற்கும் மனமே காரணம்.ஆகையால் மனமே ஜீவாத்மாவிற்கு பந்து.மனமே ஜீவாத்மாவிற்கு சத்துரு.ஆகையால் நிலை நின்ற யோகத்தையுடையவனாக

இருந்துகொண்டு ஸம்ஸாரத்திலிருந்து கரையேற வேண்டுமேதவிர மறுபடியும் கீழேபோகும்படிச் செய்யக்கூடாது.

அர்ஜுனன்–ஹ்ருஷிகேச!ஒன்றுக்கே ஒருவனைக் குறித்து பந்துவாக இருக்கையும் சத்ருவாக இருக்கையும் எப்படிக்கூடும்?

க்ருஷ்ணன்–பார்த்த!சப்தாதி விஷயங்களில் மனத்தைச் செல்லவிடாமல் எவன் தடுக்கிறுனோ, மனத்தை ஜயிக்கிறுனோ அவனுக்கு மனம் பந்துவாகிறது. மனத்தை ஜயிக்காதவனுக்கு மனமே சத்துருவைப் போல் விரோதம் செய்வதிலேயே நோக்குடையாதாக இருக்கும்.

"மந ஏவ மநுஷ்யாணும் காரணம் பந்தமோக்ஷயா:
பந்தாய விஷயாஸங்கி முக்த்யை நிர்விஷயம் மந:"

என்று பராசர மகரிஷியும் அருளிச் செய்துள்ளார். மனிதர்களின் பந்த மோக்ஷங்களுக்கு மனமே காரணம். விஷயங்களில் பற்றுதலையுடைய மனம் ஸம்ஸார பந்தத்திற்குக் காரணமாகிறது. விஷயங்களில் ஆசையில்லாத மனம் மோக்ஷத்தைப்பெற காரணமாகிறது.

அர்ஜுனன்–கண்ணு!யோகத்தை ஆரம்பிப்பதற்குத் தகுந்த தசை எப்பொழுது உண்டாகும்?

க்ருஷ்ணன்–அர்ஜுன!சீதம், உஷ்ணம், ஸுகம், துக்கம், புகழ்தல், பழித்தல் இவற்றில் எது நேர்ந்தாலும் விகாரமற்ற மனத்தை உடையவனுடைய மனத்தில் பரிசுத்தமான ஆத்மாவானது நிலைபெற்றிருக்கும். இந்த தசையில் யோகத்தை ஆரம்பிக்கலாம். இந்திரியஜயம்தான் சீதோஷ்ண ஸுக துக்கங்களைப் பொறுத்துக் கொள்வதற்குக் காரணமாகிறது. ஜயிக்கப்பட்ட இந்திரியங்களை உடையவனுய், ஓட்டுசல்லி, கல், பொன் இவற்றை ஸமமாக பாவிக்கும்–பார்க்கும் கர்மயோகி ஆத்மாவலோகனமாகிய யோகாப்யாஸத்திற்குத் தகுந்தவனுகிறுன்.

அர்ஜுனன்–க்ருஷ்ண!பொன், கல் முதலான அசேதன வஸ்துக்களை ஸமமாகப் பார்க்கவேண்டும் என்றுய். சேதனர்களைத் தனித்தனியாக பார்க்கவேண்டுமா?

க்ருஷ்ணன்–தனஞ்செய!
ஸுஹ்ருத், மித்ரன், அரி, உதாஸீனன், மத்யஸ்தன், த்வேஷ்யன், பந்து, ஸாது, பாபி இவர்கள் எல்லோரையும் ஸமமாக பாவிக்கிறவன் அசேதன வஸ்துக்களை ஸமமாக பாவிக்கிறவனைக் காட்டிலும் சிறந்தவன்.

அர்ஜுனன்–யோகம் செய்யும் முறையை அருளிச் செய்யவேண்டும்.

க்ருஷ்ணன்–அர்ஜுன!கர்மயோகத்தில் நிஷ்டையை உடையவன் தினந்தோறும் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டுள்ள ஸாத்துவிகமான காலத்தில், ஜன நடமாட்டம் இல்லாததும் சப்தம் இல்லாததுமான இடத்தில் சப்தம் இல்லாததுமான இடத்தில் மற்றவர் யாரும் இல்லாமல் தனியாக இருந்து கொண்டு மனத்தை அடக்கியவனுகவும், ஆத்மாவைத் தவிர மற்ற வஸ்துக்களில் ஆசையற்றவனுகவும் தனது என்ற அபிமானம் இல்லாதவனுகவும் இருந்து கொண்டு தன்னை ஆத்மாவலோகனத்தில் நிஷ்டையுடையவனுகச் செய்யவேண்டும்.

மேலும் யோகாப்பியாஸத்திற்கு அவசியம் வேண்டியவையுமான வெளி உபகரணங்களைச் சொல்கிறேன் கேள். பாஷண்டிகள், நாஸ்திகர்கள், பதிதர்கள் முதலானவர்களுடையவோ, அவர்களுடைய நிர்வாகத்திலுள்ளதாகவோ இல்லாததாயும், எச்சில் முதலிய வெளிதோஷங்களற்றதாயுமுள்ள

பரிசுத்தமான இடத்தில்,உயர்ந்ததாகவோ தாழ்ந்ததாகவோ இல்லாத உறுதியான ஆஸனத்தில்,பட்டையும் அதன் மேல் க்ருஷ்ணஜினத்தையும் அதன் மேல் தர்ப்பத்தையும் போட்டுக்கொண்டு அதில் உட்கார்ந்துகொண்டு ஆத்ம சிந்தனத்தைச் செய்ய வேண்டும்

உடலில் நடுப்பாகத்தையும் தலயையும் கழுத்தையும் ஸமமாக–நேராக இருக்கும்படி வைத்துக்கொண்டு ஆடாமல் அசையாமல் உட்கார வேண்டும்.உட்கார்ந்திருக்கும்போது ச்ரமமில்லாமல் இருப்பதற்கு முதுகுக்கு முட்டுக் கொடுத்து உட்கார வேண்டும்.நாற்புறமும் சுற்றிப் பாராமல் தன் மூக்கின் நுனியிலேயே பார்வையைச் செலுத்திக் கொண்டு ஆத்மாநுபவத்தில் ஸந்தோஷமுடைய மனத்தினனும் ப்ரம்மசர்ய வீரத்தையுடைவனும் இருக்க வேண்டும்.மனத்தை அடக்கி என்னையே போக்யமாக நினத்து என்னிடத்தில் மனத்தைச் செலுத்தி என்னையே த்யானம் செய்து கொண்டிருக்க வேண்டும்.

அர்ஜுனன்–க்ருஷ்ண!ஜீவாத்மாவைப் பற்றிய யோகத்தைச் சொல்லும் ஸந்தர்ப்பத்தில் மச்சித்த மத்பர:‘என்று பரமாத்மாவான உன்னுடைய த்யானம் எதற்காக விதிக்கப்படுகிறது?

க்ருஷ்ணன்–பாண்டு நந்தன!ஸர்வோத்க்ருஷ்டனும்,பரமாத்மாவாயும்,திவ்யமங்கள விக்ரஹத்தோடு கூடியவனுமிருக்கும் புருஷோத்தமனை என்னிடத்தில் மனத்தைச் செலுத்திப் பரிசுத்தமான மனத்தினை யோகியானவன் பரமாத்மாவினிடத்தில் இருக்கிற தன்மையை அதாவது பசி,தாகம்,துக்கம்,மோகம்,பிறப்பு,இறப்பு ஆகிய தோஷங்கள் இல்லாமையை அடைகிறான்.ஆகையால் என்னை அவசியம் த்யானம் பண்ணவேண்டும்.

யோகம் செய்பவன் அதிகம் சாப்பிடக் கூடாது.பட்டினி கிடக்கவும் கூடாது.அதிகமாக நடக்கவும் கூடாது. நடக்காமலும் இருக்கக் கூடாது.அதிகமாக தூங்கக் கூடாது.அதிகமாக விழிக்கவும் கூடாது.அதிகமாக வேலை செய்து சரீரத்தை ஆயாஸப்படுத்திக் கொள்ளவும் கூடாது.இவைகளுக்கு மாறாக இருப்பவனுக்கு யோகம் ஸித்திக்காது.எல்லாவற்றிலும் மிதமாக இருந்தானேயாகில் அவனுக்கு ஸம்ஸார பந்தத்தை விலக்கும் யோகமானது பூர்ணமாக ஸித்திக்கும்.

உதரஸ்யார்த்தம் அந்நஸ்ய த்ருதீயம் உதகஸ்ய து வாயோ:ஸஞ்சரணர்த்தம் து சதுர்த்தம் அவசேஷயத்

வயிற்றினுடைய பாதியை அன்னத்திற்காகவும் அரை வயிறுதான் சாப்பிட வேண்டும்.மூன்றாவது பாகம் தீர்த்தத்திற்காகவும் ஏற்படுத்த வேண்டும். வாயு–மூச்சுக்காற்று தாராளமாக ஸஞ்சரிப்பதற்காக நாலாவது பாகத்தை நிரப்பாமலே வைத்திருக்க வேண்டும் என்று சாஸ்திரம் கூறுகிறது.

அர்ஜுனன்–நீ கூறியபடி யோகம் செய்கிறவனுக்கு எப்பொழுது யோக பூர்த்தியானது உண்டாகும்?

க்ருஷ்ணன்–எப்பொழுது பலனில் செல்லும் மனம் மற்றவைகளில் நாட்டம் கொள்ளாமல் ஆத்மாவினடத்திலேயே லயிக்கிறதோ அப்பொழுது அவனுக்கு யோக பூர்த்தியானது உண்டாகும்.காற்று இல்லாத இடத்தில் இருக்கும் விளக்கானது எப்படிச் சலிக்காமலும் ப்ரகாசத்துடன் கூடியதாகவும் இருக்கிறதோ அவ்விதமே மனத்தை ஆத்மவிஷயத்திலேயே செலுத்தி யோகம் செய்கிறவனுடைய ஆத்மஸ்வரூபம் சலிக்காமல் ஜ்ஞானமாகிய ப்ரகாசத்துடன் கூடியாதாய் இருக்கும்.மெல்ல தைரியத்தை அடைந்து விவேகத்தைப் பெற்று மனத்தை ஆத்மாவைத் தவிர மற்ற விஷயங்களிலிருந்து விலக்கி ஆத்மாவினடத்திலேயே நிலை பெற்றிருக்கும்படி செய்ய வேண்டும்.

அர்ஜுனன்–ஹ்ருஷிகேச!மனத்தை ஸுலபமாக அடக்க முடியாதே!என்ன செய்வது?

க்ருஷ்ணன்–மனமானது ஆத்மாவைப்பற்றி நிலைத்து நிற்காது. சஞ்சலமாக இருப்பதே அதன் ஸ்வபாவம். ஆகையால் ஆத்மாவினிடத்திலுள்ள பேரின்பத்தை ஆராய்ந்து, இதுவே பரம ஸுகம் என்ற எண்ணத்தினால் ஆத்மாவினிடமே மனம் லயிக்கும்படி மனத்தை வசமாக்கிக் கொள்ளவேண்டும். இவ்விதம் யோகத்தின் ப்ரபாவத்தினால் உண்டாகிற ஸுகம் ஆத்மாநுபவம் என்றும் ஸாக்ஷாத்காரத்திற்குப் பிறகு நிரதிசயமானது என்றும், நிவ்ருத்தி செய்ய முடியாதது என்றும், ஆயாஸமில்லாமல் உண்டாகக்கூடியது என்றும் அறிவாயாக.

அர்ஜுனன்–ஸமதர்சனமாகிற யோகத்தில் வித்யாஸம் ஏதாவது உண்டா?

க்ருஷ்ணன்–ஸமதர்ஸனமாகிற யோகத்தின் பரிபாகத்தில் வித்யாஸங்கள் உண்டாகிறபடியால் யோகம் நாலு விதமாகிறது. அதில் முதலாவது தசையில் எல்லோருடையவும் ஆத்மாக்கள் ஜ்ஞானைகாகாரமாக இருப்பதால் யோகம் பண்ணுபவன் எங்கும் ஸாம்யத்தை காண்கிறான். வித்யாஸங்கள் எல்லாம் சரீரத்திலேயே. ஸாம்ய புத்தியுடைய யோகியானவன் தன்னை எல்லாப் ப்ராணிகளிடத்தில் இருப்பவனாகவும், எல்லாப் ப்ராணிகளையும் தன்னிடத்தில் இருப்பவையாகவும் பார்க்கிறான். அதாவது தன்னுடைய ஆத்மா எல்லாப் ப்ராணிகளின் ஆத்மாக்களுக்கும் ஸமமான ஆகாரத்தை உடையதாகவும், எல்லாப் ப்ராணிகளடத்திலும் உள்ள ஆத்மாக்கள் தன்னுடைய ஆத்மாவைப் போன்றதே என்றும் பார்க்கிறான் என்று அர்த்தம்

இரண்டாவதுபடி–முன்பு சொன்னதைவிட உயர்ந்த பரிபாக தசையை அடைந்த யோகியானவன் எனக்கு ஸமமான ஸ்வபாவத்தை அடைந்தவனாகிறான் அதாவது பரிசுத்த ஆத்மாவிற்கும் எனக்கும் ஸாம்யத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிற எவன் எல்லா ஜீவாத்மாக்களிலும் பரம புருஷனான என்னைப் பார்க்கிறானோ அவ்விதமே அவ்விதமே எல்லா ஜீவாத்மாக்களையும் என்னிடத்தில் பார்க்கிறானோ அவனுக்கு நானும் பார்க்கப்படாமல் இருப்பதில்லை. என் ஸ்வரூபத்தைக் காணும்போது என் ஸ்வரூபம் போன்றுள்ள ஜீவாத்மஸ்வரூபத்தைக் காண்பது போல், ஜீவனும் தன்னைக் காண்பதுபோல் என்னையும் பார்க்கிறான்.

மூன்றாவது தசை இரண்டாவதைவிட உயர்ந்தது. யோகம் பண்ணும் தசையில் ஸர்வபூதங்களிலும் வ்யாபித்திருக்கிற என்னை ஜ்ஞானஸங்கோசமில்லாத ஸ்வபாவத்தினால் தானும் பகவானும் ஒருவரே, ஒரே மாதிரியானவர்களே என்று எவன் ஸுத்ருடம்–உறுதியான த்யானம் செய்கிறானோ அவன்  யோகத்தைச் செய்யாமல் இருந்த வேளைகளிலும் என்னிடத்திலேயே இருக்கிறான்.

நாலாவது தசை ,தன்னுடைய ஆத்மாவும் பிறர்களுடைய ஆத்மாவும் ஜ்ஞானைகாகாரமாக ஸமமாக இருப்பதினால் தனக்கோ மற்றவர்களுக்கோ ஏற்படும் ஸுக துக்கங்களை ஸமமாக பாவிப்பவன் யோகத்தின் உயர்ந்த நிலயை அடைகிறான்.

அர்ஜுனன்–மதுஸூதன! இதுகாறும் பலவித வித்யாஸங்களையே கண்டு அநுபவித்த என்னால் ஜீவர்கள் எல்லோரும் ஸமர்களாகவும், கர்ம ஸம்பந்தமற்றவர்களாதலால் ப்ரம்மத்தோடும் அவன் குணங்களோடும் ஸம்பந்தம் பெற்றவர்களாகையால் ஜீவேச்வரர்களை ஸமர்களாகவும் பார்க்க வேண்டும் என்று உன்னால் உபதேசிக்கபட்ட யோகம் சஞ்சலமான என் மனத்தில் நிலைபெற்றிருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை.

மனம் மிகவும் சஞ்சலமானது. பழகிய விஷயங்களிலேயே நிலையாக நிற்பதில்லை. இதுவரை பழகாத ஸாம்யபுத்தியை நான் எவ்விதம் பெற முடியும்? பெருங்காற்றை விசிறி முதலியவற்றால் தடுப்பது போலாகும். ஆகையால் மனத்தை அடக்குவதற்கு உபாயத்தை அருளிச்செய்ய வேண்டும்.

க்ருஷ்ணன்–மனத்தை ஸுலபமாக அடக்க முடியாது. ஆத்மாவின் குணங்களை அடிக்கடி நிந்திப்பதனுல் உண்டான ஆசையினுலும், மற்ற விஷயங்களில் தோஷங்களைப் பார்ப்பதனுல் உண்டான வைராக்யத்தாலும், சஞ்சலமான மனத்தைக் கஷ்டப்பட்டு அடக்கலாம்.

அர்ஜுனன்–யோகத்தில் இழிந்த ஒருவன் யோக ஸித்தியை அடைவதற்கு முன்னமே யோகத்தைப் பண்ணுமல் நிறுத்திவிட்டவன் எந்தக் கதியை அடைகிருன்? அதாவது போகத்தையா? மோக்ஷத்தையா? நரகத்தையா?

க்ருஷ்ணன்–பார்த்த! ஆத்மாவைக் காண வேண்டுமென்ற ஆசையினுல் யோகத்தை ஆரம்பித்தவன் மற்றப் பலனில் உண்டான ஆசையினுல் யோகத்தை விட்டுவிட்டாலும் அவனுக்கு ஸ்வர்க்காதி பலனே, ஐச்வார்யாதிகளோ, ஆத்மாவலோகனமோ கிடைக்காமல் போகாது. அவனுக்கு ஆரம்பித்ததைவிட்டதனுல் எந்தவிதமான ப்ரத்யவாயமோ தோஷமோ உண்டாகாது. மிகுந்த மங்களகரமான யோகத்தைச் செய்கிறவன் எவனும் எக்காலத்திலும் கெட்ட கதியை அடையமாட்டான். யோகாரம்பத்திலேயே யோகத்தை விட்டவன் யோக மாஹாத்ம்யத்தால் புண்ணியம் செய்தவர்கள் அடையக்கூடியவையான லோகங்களை அடைந்து, அவன் ஆசைப்பட்டபடி சிறந்த போகங்களை அநுபவிப்பான். அந்த ஸுகங்கலிள் ஆசை கழிந்து வைராக்யம் உண்டாகிற வகையில் அவ்விடத்திலேயே வஸித்து, பிறகு சுத்தர்களாயும் தனதான்ய ஸம்ருத்தியுள்ளவர்களாயும் இருப்பவர்களின் குலத்தில் பிறப்பான்.

யோகம் முதிர்ந்த நிலையில் யோகத்தைப் பண்ணுமல்விட்டவன் மஹா மேதாவிகளான யோகிகளின் குலத்திலேயே பிறக்கிருன். யோக மாஹாத்ம்யத்தாலேயே இவ்விதப் பிறவிகள் உண்டாகின்றன.

அர்ஜுனன்–யோகேச்வர! முன் ஜன்மத்தில் ஆரம்பித்த யோகம் அந்த ஜன்மத்திலேயே விட்டுப்போனபடியால் யோகிகளின் திருமாளிகைகளில் பிறப்பது மாத்திரம் மோக்ஷத்திற்குக் காரணமாகுமா?

க்ருஷ்ணன்–முன் ஜன்மத்தில் செய்த யோகாப்யாஸாத்தின் வாஸனையினுல் தன்னையும் அறியாமல் அவன் யோகம் செய்ய ஆரம்பிக்கிருன். தூங்கி எழுந்தவன் முன்பு செய்து வந்த கார்யத்தைத் தொடர்ந்து செய்யுமாப்போலே, மறுபடியும் ஸித்தியில் ப்ரயத்தனப்படுகிருன். மறுபடியும் இடையூறு நேராவண்ணம் பலனைப் பெறப் ப்ரயத்தனம் செய்கிருன். யோகத்தின் மகிமை இவ்விதம் உள்ளது லோகப்ப்ரஸித்தமாயிற்றே! ஒருவனுக்கு யோகத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும், அதை அநுஷ்டிக்க வேண்டும் என்ற ஆசை மட்டும் இருந்தது. ஆனுல் அதைத் தெரிந்துக்கொண்டு அநுஷ்டிக்கவில்லை. அதிலிருந்து மனம் சலித்துப் போயிற்று. அப்படிப்பட்டவனும் மறு ஜன்மத்தில் மறுபடியும் அந்த ஆசையை அடைந்து ,கர்மயோகம் முதலிய யோகத்தை அநுஷ்டித்து முக்தனுகிருன். ஜ்ஞாநாநந்த ஸ்வரூபனை சுத்த ஆத்மாவை அடைகிருன்.

அர்ஜுனன்–மாதவ! இப்படிப்பட்ட மகிமை தபஸ் முதலியவற்றிற்கும் இருக்கிறதல்லவா?

ஸ்ரீக்ருஷ்ணன்–இப்படிப்பட்ட யோகத்தின் மகிமை தபஸ் முதலியவற்றுக்குள் ஒன்றுக்குமில்லை. ஆகையால் தபஸ் செய்கிறவனைவிட யோகியானவன் உத்க்ருஷ்டன். யோகியானவன் சிறந்தவன். ஜ்ஞானியைக்காட்டிலும் உயர்ந்தவன். அச்வமேதாதி யாகங்களை அநுஷ்டித்தவர்களைக் காட்டிலும் யோகியானவன் உத்க்ருஷ்டன். யோகியானவன் மேலே கூறியவர்கள் எந்த எந்தப் பலனை அடைகிருர்களோ அவர்களைக் காட்டிலும் மேலானப் பலனைப் பெறுகிருன். ஆகையால் அர்ஜுன! நீ யோகியாகக் கடவாய்.

அர்ஜுனன்–வாசுதேவ! ஆத்ம ஸாக்ஷாத்காரமே யோக ப்ரதானமா?

இதற்கு மேற்பட்டதாக எதாவது யோகம் உண்டா?

க்ருஷ்ணன்–என்னிடத்தில் உண்டான அதிகப் ப்ரீதியினால் என்னை விட்டுத் தரிக்க முடியாத நிலயைப் பெற்று, எப்பொழுதும் என்னிடத்தில் மனத்தைச் செலுத்தியவனாய், ஒரு க்ஷணங்கூட என்னுடைய பிரிவைப் பொறுக்கமாட்டாதவனாய், என்னைப் பெற துரிதப்பட்டு எவன் என் விஷயமான யோகத்தைச் செய்கிறானோ அவன் ஆத்மயோகிகளைக் காட்டிலும்,தபஸ்வி முதலியர்வகளையும் உயர்ந்த உபாயத்தை உடையவன் என்று எல்லாவற்றையும் எப்பொழுதும் உள்ளது உள்ளவாறு காண்கிற நான் நினக்கிறேன்.

ஆறும் அத்தியாயத்தின் பரம ஸாரம் முற்றும்